பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 30 வெள்ளிக்கிழமை 13.01.2023 கதிர் 68

### இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்னிரவு ஒரு சில தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களை இரவு விருந்துடன் சந்தித்தார்.

அவரது கொழும்பு இல்லத்தில் அகன்ற தொலைக்காட்சி திரையில் இலங்கை –

☞2

# கடன் தவணை மீளாய்வுக்கு விரைந்து இணங்குமாறு சீனாவிடமும் இந்தியாவிடமும் இலங்கை கோரிக்கை



கொழும்பு, ஜன. 13


கடன் தவணை மீளாய்வுக்கு விரைந்து இணங்குமாறு சீனா மற்றும் இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெறுவதற்கு இந்த இணக்கம் அவசியமாகியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.


மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பி.பி.சி. செய்திச் சேவைக்கு பேட்டியளித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தரப்பினரின் நலன் கருதி சீனாவும் இந்தியாவும் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பது அனைவருக்கும் நல்லது எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(விரிவான செய்தி 04ஆம் பக்கத்தில்)







# தமிழரசு தவிர்ந்த கட்சிகளின் கூட்டுக் குறித்து இன்று முடிவு

## காலையில் யாழ். நகரில் மந்திராலோசனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 13

வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய ஐந்து கட்சிகள் இன்று கூடி முடிவெடுக்க இருக்கின்றன.

இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் இது தொடர்பான கூட்டம் நடைபெற இருக்கின்றது.

☞2

## 75 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்படும்

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில், இருபது கோடி ரூபா செலவில் அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இம்முறை சுதந்திர தின வைபவத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படவுள்ளது.

மேலும் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய் சங்கர் உள்ளிட்ட 400

☞2

## புதுக் கூட்டுக் குறித்து நேற்றும் யாழில் பேச்சு

(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

பூர்வாங்க விடயங்கள் குறித்துப் பேசினோம். இன்னமும் இணக்கப்பாடு எட்டப்படாத காரணத்தால் வெள்ளிக் கிழமை (இன்று) தலைவர்கள் மட்டத்தில் அவை குறித்துப் பேசித் தீர்மானிக்கப்படும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

☞2



## நாட்டில் ஜனாதிபதி மாறியும் நிலைமை மாறவேயில்லை!

### சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் விசனம்

ஜனாதிபதி மாற்றம் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டிற்கான தனது வருடாந்த அறிக்கையினை வெளியிட்டுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி இதனைத் தெரிவித்துள்ளார்.

(விவரமான செய்தி 12ஆம் பக்கத்தில்)

## புன்னாலைக்கட்டுவனில் இருவர் போதை மாத்திரைகளுடன் கைது

யாழ்ப்பாணம் – புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஆணொருவரும் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸ்

☞11

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு தமிழ் மக்களுடன் மட்டும்தான்



## ஒற்றையாட்சிக்குத் துணை போகும் கும்பல்களுடன் அல்ல என்கிறார் சுகாஷ்

தமிழ் மக்கள் தேசியமாவீரர்களின் தியாகங்களுக்குப் புறம்பாக செயற்படுகின்றவரோடும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடாத்தவோ அல்லது இணைந்து செயற்படவோ போவதில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் இதுவரை காலமும் திரை மறைவில் பதவிகளுக்கு போட்டி போடுவதை ஏற்கனவே நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம்.

☞11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்து ரசித்தபடியே, ஒரு சிநேக பூர்வ உரையாடலில் அவர் ஈடுபட்டார்.

பேச்சு நடுவே, அவர் அண்மையில் சம்பந்தனின் இல்லத்துக்குச் சென்று அவரிடம் சுகம் விசாரித்தமை பற்றியும் உரையாடப்பட்டது.

சற்று நேரம் கழித்து திடீரென சம்பந்தன் பற்றித் தாமே கருத்து வெளியிட்டார் மஹிந்தர்.

'சம்பந்தருக்கு ஒன்று நேர்ந்துவிட்டால், அவருக்குப் பின் தமிழ்க் கட்சிகளின் நிலைமை சிக்கலாகிவிடும். மோதிக் கொள்வார்கள்' என்று சாரப்பட அவர் கருத்து வெளியிட்டார். நான் குறுக்கிட்டேன். சம்பந்தன் இருக்கும்போதே நிலைமை சிக்கலாகி விட்டது, கூட்டமைப்பு தேர்தலில் இரு வழி போகிறது என்றேன். அப்படியா என்று சிறிது விசனத்துடன் செவிமடுத்த அவர், இது தமிழருக்கு நல்லதற்கல்ல என்ற சாரப்பட பதில் அளித்தார்.

ரொம்பவும் தளர்ந்து விட்டார். வயதாகி விட்டது. கட்சி வேலைகளையும் தேர்தல் அலுவல்களையும் பஸில் நன்கு கவனிக்கின்றார் என்ற திருப்தி அவருக்கு. தேவைப்பட்டால் பிரச்சாரத்துக்குத் தான் தலை காட்டுவார் என்ற எண்ணத்தில், இயன்ற அளவு வெற்றி பெறுவோம் என்ற திருப்தியில் இருக்கிறார்.

விரைந்து அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதிய ஜனாதிபதி ரணில் பின்னடைக்கின்றமையைக் குறிப்பிடும் அவர், அப்படியே நிலைமையை இழுத்துக் கொண்டு போவோம் என்ற எண்ணத்தில், அரசியல் முடிவுகள் எடுக்காமல் ஜனாதிபதி இருக்கின்றாரோ என்ற கருத்து நிலைப்பாட்டை பிரதிபலித்தார்.

தமிழர் தரப்பிலும், தெற்கிலும், ஒரு மூத்த தலைமுறையின் தலைமைத்துவம் தளர்வை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

***

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு புதிய மேயரைத் தெரிவு செய்வதற்கான அறிவுறுத்தல் அடங்கிய வர்த்தமானி வந்துவிட்டது.

மேயர் பதவியைத் தான் ராஜினாமா செய்தமையோடு யாழ் மாநகர சபையும் கலைந்து விட்டது, அதை மீறி யாராவது மீண்டும் புதிய மேயரை தெரிவு செய்வதற்காக தற்போதைய மாநகர சபையைக் கூட்டினால், நீதிமன்றத்திற்கு போய் அதற்கு சட்ட ரீதியாகத் தடை வாங்குவேன் என்று சட்டத்தரணியாகவும் மணிவண்ணன் தெரிவித்திருந்தார்.

மணிவண்ணனின் கூற்று இப்போது தலை கீழாகி விட்டதாகத் தெரிகிறது.

மீண்டும் மேயர் தேர்வு நடத்த முற்பட்டால், நீதிமன்றம் மூலம் அதற்குத் தடை உத்தரவை வாங்குவேன் என்ற மணிவண்ணன், இப்போது அந்தப் போக்கைக் கைவிட்டு, தேர்வில் தாம் திரும்பவும் மேயராக வருவதற்கான போட்டியில் குதிக்கத் தயாராகி விட்டார் என்று தெரிகிறது.

அப்படியானால் அத்தகைய தெரிவு நடந்தால் அதைத் தடுக்க நீதிமன்றுக்குப் போவேன் என்ற மணிவண்ணனின் கூற்று என்னாயிற்று என்ற கேள்வி எழுகிறது.

வடிவேலு பாணியில் கூறுவதானால், 'முன்னர் சொன்னது நாறல் வாய். இப்போது மேயர் தெரிவில் போட்டியிடுவேன் என்று கூறுவது வேறுவாய் போலும்...!'

- மின்னல் -

## தமிழரசு தவிர்ந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கூட்டணி, அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள், அவற்றின் பொதுச் சின்னம், தேர்தலை அணுகும் தந்திரோபாயம், சபைகள் - வட்டாரங்கள் பகிர்வு, அதிகாரம் அளிக்கப்பட்ட மாவட்ட முகவர்கள் நியமனம் போன்ற விடயங்கள் குறித்து இன்று பேசி தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஐந்துமே ஒன்று கூடி ஆராய உள்ளன.

ஜனநாயகப் போராளிகள் கட்சி இக்கூட்டில் சேருமா என்பது குறித்தும் இன்று நடைபெறும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

இதே சமயம் இக்கட்சிகளின் சில தலைவர்களும், இரண்டாவது மட்டப் பிரமுகர்களும் நேற்று மாலை யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் ஒன்று கூடி சுமார் ஒரு மணி நேரம் பூர்வாங்கக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

## 75 ஆவது சுதந்திர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திரிகள் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படும் அதே வேளை, வைபவத்தின் போது ஜனாதிபதியின் விசேட உரை இடம்பெறாது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

75 ஆவது சுதந்திர தின வைபவங்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்து கொண்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த ஆகியோர் இவ்விடயங்களை தெரிவித்தனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவிக்கையில் -

'நமோ நமோ தாயே - நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் 75 ஆவது சுதந்திர தின வைபவம் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மத வழிபாடுகளுக்கு முன்னுரிமையளித்து பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் அவை ஆரம்பமாகும்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு சித்திரப் போட்டி, கலாசார மாநாடுகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு செயற்திட்டங்கள் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைமுறைப்படுத்தவுள்ளன.

சுதந்திர தினத்திற்கான பிரதான நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் காலி முகத்திடலில் காலை 8.30 க்கு ஆரம்பமாகும். முப்படையினர் , பொலிஸார் மற்றும் தேசிய பயிற்சிப் படையணி மாத்திரம் பங்கேற்கும் மரியாதை அணிவகுப்பு இடம்பெறும்.

முப்படையினர், பொலிஸ் மற்றும் தேசிய பயிற்சிப்படையணியைச் சேர்ந்த 6,012 படையினரும், 320 வாகனங்களும் இந்த பேரணியில் பங்குபற்றவுள்ளன. மேஜர் ஜெனரல் தீபால் புஸ்வெல்லவின் தலைமையில் இந்த பேரணி இடம்பெறவுள்ளது.

இந்த வைபம் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய சம்பிரதாய பூர்வமாக இடம்பெறும் ஜனாதிபதியின் உரை வைபத்தின்போது இடம்பெறாது. மாறாக அன்றைய தினம் மாலை வேளையில் ஜனாதிபதியின் விசேட உரை இடம்பெறும்.

எதிர்வரும் 25 ஆண்டுகளை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களின் அடிப்படையில் சுதந்திர தின வைபவ கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன. அனைத்து இன மற்றும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களை ஒன்றிணைப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய சுதந்திர தின வைபவங்கள் ஆரம்பமாகும் போது தேசிய கீதம் சிங்கள மொழியிலும், நிறைவடையும் போது தமிழ் மொழியிலும் பாடப்படும் என்றார்.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த தெரிவிக்கையில் -

கண்டி - தலதா மாளிகையில் பெப்ரவரி 2 ஆம் திகதி மாலை 3 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளன. கொள்ளுப்பிட்டி பொல்வத்தை விகாரையில் சுதந்திர தினத்தன்று காலை 7.30 க்கு பௌத்த மத வழிபாடுகள் இடம்பெறும்.

சுதந்திர தின வைபவங்கள் ஒரே நாளில் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக மாவட்ட மட்டத்திலும் , பிரதேச செயலக மட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதே போன்று பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி சகல மத வழிபாட்டு தலங்களில் 75 விளக்குகளை அல்லது மெழுகு வர்த்திகளை ஏற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஏற்பாடுகளுக்கு அப்பால் 1996 குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு 2 மில்லியன் குடும்பங்களை இலக்காகக் கொண்டு 10 கிலோ கிராம் என்ற அடிப்படையில் இரு சந்தர்ப்பங்களில் அரிசி வழங்கப்படவுள்ளது. கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் வீதிகளின் இரு மருங்கிலும் பொது மக்கள் சுதந்திர தின கொண்டாட்டங்களை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 1,000 ரூபா நாணயக் குற்றிகள் 75 வெளியிடப்படவுள்ளன.

அத்தோடு டி.எஸ்.சேனாநாயக்க , ஜவஹர்லால் நேரு மற்றும் மொஹம்மட் அலி ஜின்னா ஆகியோரது நிழற்படங்கள் பதிக்கப்பட்ட முத்திரைகளும் வெளியிடப்படவுள்ளன.

மேலும் பொது நலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரச தலைவர்கள் உள்ளிட்ட 400 இராஜதந்திரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதே வேளை தேசிய மட்டத்தில் அரச தலைவர்கள், நாட்டு நலனுடன் தொடர்புடைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதானிகள் உள்ளிட்ட 3,250 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவங்களுக்கு 757 மில்லியன் ரூபாய் செலவாகும் என்று ஆரம்பத்தில் மதிப்பிப்பட்ட போதிலும், உள்ளூராட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கிடையிலான சுமார் 20 கலந்துரையாடல்களின் பின்னர் அந்த செலவுகள் 200 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சிக்களினாலும் , சுய விருப்பத்தின் பேரில் தனியார் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டுள்ளன.

## புதுக் கூட்டுக் குறித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளின் புதிய கூட்டணி தொடர்பில் நேற்றைய தினம் ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில் இடம்பெற்ற 5 கட்சிகளின் கூட்டத்தின் நிறைவில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

இன்றைய (நேற்றைய) சந்திப்பிலே பல விடயங்கள் பேசப்பட்டன அதிலே சில விடயங்களில் எமக்கு இணக்கப்பாடு இல்லாதபடியால் அவை தொடர்பில் நாளை (இன்று) 5 கட்சிகளின் தலைவர்கள் கூடிப் பேசி தீர்மானம் எடுத்த பின்பு ஏனைய விடயங்கள் தொடர்பில் பேசவிருக்கின்றோம்.

எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பிலும், அதன்போதே தீர்மானிக்கப்படும். இதேநேரம் உள்ளூராட்சித் தேர்தலிற்காக கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட முகவர்களின் பெயர்களை நாளை மறுதினம் (நாளை) வழங்க

(11ஆம் பக்கம் பார்க்க)






# இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றென்றால் ஏன் என்று கேட்பதற்கு 20 கிலோமீற்றர் தூரத்திலேயே எங்கள் அண்ணன் இருக்கின்றார்!

## தமிழ்நாட்டு அயலக தின நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. பெருமிதம்

தமிழ் அயலக தினம் என்பது உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. நிச்சயமாக நலிந்து, மெலிந்து கிடக்கின்ற இலங்கைவாழ் தமிழர்களுக்கு இது ஓர் எழுச்சியைக் கொடுத்திருக்கின்றது. எங்களுக்கு மிகவும் பலமான உறவுகள் தமிழகத்திலே இருக்கின்றார்கள். தமிழர்களுக்கு ஒன்றென்றால் ஏன் என்று கேட்பதற்கு அண்மித்த நாட்டிலேயே - 20 கிலோ மீற்றர் தூரத்திலேயே எங்கள் அண்ணன் இருக்கின்றார் என்ற பெருமிதத்தோடும் நம்பிக்கையோடும் இன்றைக்கு நாங்கள் இலங்கையிலே வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

இவ்வாறு பெருமையோடு தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட அயலகத் தமிழர் தின நிகழ்வில் சென்னையில் வைத்து முழங்கினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையிலே தமிழர்கள் அல்லற்பட்ட சமயத்திலெல்லாம் இங்கே குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர் கருணாநிதி என்பதை என்றென்றும் நாங்கள் மறக்கமாட்டோம். அதுபோலவே அண்மித்த காலத்திலே பஞ்சம் ஏற்பட்டபோது - பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோது - தமிழ் உறவுகளுக்குக் கொடுங்கள் என்று சொல்லி மிகப்பெரிய உதவியை மூன்று கப்பலில் பொருள்களை நிரப்பி எங்களுக்கு உதவிகளை அனுப்பிவைத்தமையை நாங்கள் என்றைக்கும் மறக்கமாட்டோம். அதனால்தான் இன்றைக்கு நான் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு யாழ். ஒன்றைப் பரிசாகக் கொடுத்த போது "மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு" என்ற குறளிலிருந்து ஒரு பகுதியை எழுதிக் கொடுத்திருந்தோம். மாசற்ற உள்ளத்தோடு எங்களுக்கு நீங்கள் செய்த அந்த உதவிக்கு - அந்த நட்புக்கு - நாங்கள் என்றென்றும் நன்றி மறவாதிருப்போம்.

அண்மித்த காலத்திலே இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எங்களுடைய



அரசியல் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக - தமிழனாகத் தலைநிமிர்ந்து நிற்பதற்காக - ஆயுதம்கூட எடுத்துப் போராடினோம். அதெல்லாம் எப்படியாக முடிந்த தென்றாலும்கூட எங்களுடைய தனித்துவத்தை நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை. அதை நாங்கள் பேசி தொடர்ந்து உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்காகப் பலவிதமான சாத்தியப் போராட்டங்களின் ஊடா கக்கூட நாங்கள் நிலைநாட்டுவோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அதற்குத் தமிழகம் - விசேடமாகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத் திலிருந்து மிகவும் உறுதுணையாக இருந்திருக்கின்றது. இன்றைக்கு நீங்கள் செய் திருக்கின்ற இந்த மாபெரும் மாநாடென்பது தமிழகம் மட்டுமல்ல, உங்கள் தலைமையிலே உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழர் களின் ஆதரவும் எங்களுக்கு உண்டென்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது. அதைச் செய்தமைக்கும் நாம் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்தோடு - புதிய ஜனாதிபதியோடு - ஒரு பேச்சை அண்மையில் ஆரம்பித்திருக்கின்றோம். அரசியல் தீர்வுக்காக - தமிழ் மக்களின் அரசியல் விடிவுக்காக - எங்களை நாங்களே ஆளக் கூடிய ஒரு பொறிமுறையை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்துவதற்காக அந்தப் பேச்சிலே சில தவறுதல்கள், நான் இங்கு வருவதற்கு முதல்நாள்கூட ஒரு சுற்றுப் பேச்சு நடந்தது. அரசு சொல்பவற்றைச் செய்வதில்லை என்கின்ற ஏக்கத்தோடு தான் நான் விமானம் ஏறி இங்கே வந்துள்ளேன். நாங்களாகச் சொல்லியிருக்கின்றோம் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு நாம் வரமாட்டோம் என்றும் ஒரு வாரகால அவகாசம் தருகிறோம். அதற்குள்ளே சொன்னதைச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கின்றோம். இப்படியான இக்கட்டான பேச்சு நடைபெறும் சமயத்திலே உலகெங்கும் வாழ்கின்ற உறவுகள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதிலே மட்டற்ற மகிழ்ச்சி. உங்கள் அனைவருடைய ஆதரவோடும் நாங்கள் எங்களுடைய அரசியல் இலக்கை அடையக்கூடியதாக இருக்கும் என்ற ஒரு நம்பிக்கை வருகின்றது.

நான் இந்த வேளையிலே தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்ணனுக்கும் விசேடமாக இந்தத் நிகழ்விலே வந்திருக்கின்ற அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களிடத்திலும் நான் கேட்பது என்னவெனில், எங்களுடைய இந்த அரசியல் போராட்டத்துக்கு நீங்கள் வலுச் சேர்க்கவேண்டும். இந்த வருடத்திலே எப்படியாவது 75 வருட காலமான அரசியல் போராட்டத்தை முடிவான - நிறைவான - புள்ளிக்குக் கொண்டுவரவேண்டும். அதற்கு உங்களுடைய குரல்களைத் தமிழ் குரலாக சேர்த்து ஒலிக்கவேண்டும் என நான் இந்த மேடையிலே அனை வருக்கும் முன்வைக்கிறேன். உங்களுடைய ஆதர வோடு நாங்கள் எமது அரசியல் இலக்கை அடையலாம் என்ற புது நம்பிக்கை வரு கின்றது. - என்றார்.

# பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் விளக்கம் கோரும் தேர்தல் ஆணைக்குழு!




பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹப்புஹின்னவிடம் விளக்கம் கோர வுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தைப் பெற வேண்டாம் என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கிய பணிப்புரை தொடர்பிலேயே இவ்வாறு விளக்கம் கோரப்படவுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தை அறிவிட வேண்டாம் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹப்புஹின்ன மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் அலுவலர்களுக்கு அத்தகைய பணிப்புரை விடுக்க தேர்தல் ஆணைக்குழுவன்றி வேறு எவருக்கும் அதிகாரமில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் பணிப்புரை மீளப்பெறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் விடுத்த பணிப்புரை தொடர்பாக அவரிடம் விளக்கம் கோரவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# சீனநாட்டு சுற்றுலாப்பயணிகளை இலங்கை வரவேற்கவேண்டுமாம்!


## கோரிக்கை விடுக்கிறார் பாலிதகோஹன

சீனாவை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் என சீனாவிற்கான இலங்கை தூதுவர் பாலிதகோஹன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீனா கொவிட் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளதால் சீனா சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதன் மூலம் டொலரை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என பாலித கோஹன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி சுற்றுலாத்துறையை வரவேற்பதற்காக சீனா சுற்றுலாப்பயணிகளை வரவேற்றுள்ளார். தாய்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநாடுகளைப்பின்பற்றி இலங்கை,



சீன சுற்றுலாப்பயணிகளை வரவேற்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீன சுற்றுலாப்பயணிகள் அதிகம் பணத்தைச் செலவு செய்பவர்கள். சுற்றுலாத்துறை மூலம் அந்நிய செலாவணி வருமானம் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ள அவர், சீனாவிலிருந்து வருபவர்களுக்கு இலங்கை கொவிட் கட்டுப்பாடுகளை விதிக்காது எனவும் தெரிவித்துள்ளார்.


# வடக்கு இளைஞர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை மேம்படுத்த நடவடிக்கைகள்

வடமாகாண இளைஞர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்தும் மாகாண மட்ட கலந்துரையாடல் இளைஞர்கள் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இளைஞர்களுக்கான வலுவான பொருளாதாரம், ஆரோக்கியமான இளைஞர் தலைமுறை, தேசிய பொருளாதாரத்துக்கான வலுவான இளைஞர் தொழில் முனைவு, இளைஞர் திறன் மற்றும் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் இளைஞர்களுக்கான புதிய வேலைகள், இளைஞர்கள் சமூக பள்ளி, இளைஞர் நாடாளுமன்ற அதிகாரம், இளைஞர்கள் விளையாட்டு, பொருளாதாரத்தில் மேம்படுத்தல் ஆகிய துறைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் விளை



யாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், யாழ். மாவட்ட பிரதம திட்டமிடல் பணிப்பாளர் நிக்களஸ் பிள்ளை உட்பட வடமாகாண விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் அமெரிக்கக் கனவு கலைந்தது

இலங்கை அரசியலில் பெரும் குழப்பங்கள் களேபரங்களை ஏற்படுத்திவிட்டு, அதனால் நாட்டு மக்களினாலேயே ஆட்சி அதிகாரத்திலிருந்து துரத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது எஞ்சிய ஒய்வு காலத்தை மகன், மருமகள், பேரப்பிள்ளையுடன் அமெரிக்காவில் களிக்க விரும்பினார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் குதிப்பதற்காகத் தான் துறந்த அமெரிக்க பிரஜா உரிமையை மீண்டும் பெற விரும்பி, அதற்காக விண்ணப்பித்துக் காத்திருக்கின்றார் அவர்.

அதுவரையில், சாதாரண நுழைவு விசா பெற்று அமெரிக்கா போகவும் விரும்பினார், அதற்கான எத்தனங்களிலும் ஈடுபட்டார் கோட்டா.

ஆனால் அவரின் அமெரிக்க பயணம் இனி மேல் சட்ட ஆபத்து மிக்கதாகிவிடும் என்ற அபாய மணி இப்போது ஒலித்து இருக்கின்றது.

இனி, அமெரிக்கப் பக்கம் கால் வைக்கவே அவர் அஞ்சும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அதுவும், அமெரிக்காவின் அயல் தேசமும், இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் போன்றவற்றில் அமெரிக்காவுடன் ஒத்து இயங்கும் போக்குடையதுமான கனடா நாடு அவருக்கு யுத்தக் குற்றங்களுக்காக தடை உத்தரவு விதித்திருக்கும் பின்னணியில், அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நிச்சயம் கோட்டாபய ராஜபக்ஷவின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது உறுதி.

உலகின் எந்த நாட்டிலும் யுத்த குற்றம் இழைக்கப்பட்டாலும், அதனை இழைத்தவர் அமெரிக்காவில் இருந்தால், அந்த யுத்த குற்றம் பற்றிய விடயங்கள் தெரிந்ததும் அந்த நபரை அமெரிக்கா வழக்கு தொடர்ந்து, கைது செய்து, உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் புதிய சட்டம் அமெரிக்காவில் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வருட இறுதியில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட – 'யுத்த குற்றத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் வழங்கும் சட்டத்தில்' அமெரிக்க ஜனாதிபதி இந்த வாரம் ஒப்பமிட்டமையால் அது நடைமுறைக்கு – செயற்பாட்டுக்கு – வந்துள்ளது.

இந்தப் பின்புலத்தில் கோட்டாபய அமெரிக்க சென்றால், அச்சமயத்தில் யாரேனும் அவர் இழைத்தவை என்று கூறப்படும் யுத்த குற்றங்கள் பற்றிய விவரங்களுடன் அமெரிக்கப் பொலிஸில் முறைப் பாடு செய்வாராயின் கோட்டாபயவின் கதி அதோ கதியாகிவிடும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா செல்வது என்பது அவருக்கு இனி மிக சிரமமானதாகவே இருக்கும். பெரும்பாலும் அது அவருக்கு பகல் கனவாகவே அமையும் என்பது திண்ணம்.

## இலங்கை செலுத்தவேண்டிய கடன்களை இந்தியாவும் சீனாவும் குறைக்கவேண்டும்!

### மத்திய வங்கி ஆளுநர் கோரிக்கை



சீனாவும் இந்தியாவும் கூடியவிரைவில் இலங்கை செலுத்தவேண்டிய கடன்களை குறைக்கவேண்டும் என மத்திய வங்கி ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிபிசியின் நியுஸ்நைட்டிற்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர் இது அனைத்து தரப்பினரினதும் நலன் தொடர்பான விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் எவ்வளவு வேகமாக கடன் உத்தரவாதங்களை வழங்குகின்றார்களோ அது கடன் பெற்றவர்களுக்கும் கடன் வழங்கியவர்களுக்கும் நன்மையளிக்கும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடன்வழங்கியவர்களுக்கான எங்களது கடப்பாட்டை நாங்கள் திருப்பிசெலுத்துவதற்கு இது உதவியாக அமையும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் பிபிசிக்குத் தெரிவித்துள்ளார்.

கடன்களை நீண்டகாலம் செலுத்த முடியாமலிருக்கும் நிலையில் இருப்பதற்கு இலங்கை விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ள இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர் இது நாட்டுக்கும் எங்களுக்கும் சிறந்த விடயமல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

இது இலங்கை மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான இந்தியா சீனாவுடனான உடன்படிக்கை ஜனவரி இறுதியில் சாத்தியமாகலாம் எனத் தெரிவித்துள்ள நந்தலால் வீரசிங்க, ஆனால் இது ஏனைய தரப்பை பொறுத்தவிடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எங்களுக்கு கடன்வழங்கியவர்கள் இது தொடர்பாக தீர்மானிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடன்பட்ட நாடுகள் கோரிய அனைத்து விவரங்களையும் வழங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்களுடைய சிறந்த தலைமைக்கான பாதையை தேர்தலின் பெறுபேறுகள் நிச்சயமாகத் திறந்துவிடும்!

### நம்புகின்றார் சிறிதரன் எம்.பி.





இந்த தேர்தலின் பெறுபேறுகள் தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைக்கான பாதையைத் திறந்துவிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நாம் கிளிநொச்சி மாவட்டத்தில் செலுத்தியுள்ளோம். கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணம் புதன்கிழமை கிளிநொச்சி தெரிவத்தாட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும், நாடாளுமன்ற குழுவிற்கும் இரா.சம்பந்தனே தலைமை வகித்துக்கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புதான் நாடாளுமன்றத்திலும், சர்வதேச சமூகத்திலும் அடையாளமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது ஓர் உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள். இந்தத் தேர்தலின் வடிவம், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் மக்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

அதற்கான கள பரீட்சையாக இதைப் பார்க்கலாம். இதில் சாதக பாதக நிலை ஏற்படலாம். இன்று வெளியான செய்திகளினடிப்படையில், எமது தலைவர் ஓர் இரு நாள்களில் இது தொடர்பில் அறிக்கை ஒன்றின் ஊடாகத் தெளிவுபடுத்த உள்ளார் என அறிய முடிகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஏன் தனித்தனியாகப் போட்டியிட வேண்டிய தேவை ஏற்பட்டது என்பது தொடர்பில் அவர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

ஆகவே, பொறுப்பு வாய்ந்த கட்சியின் உறுப்பினர் என்ற வகையில், அவருடைய அறிக்கை வரும்வரை பொறுமையோடும், நிதானத்தோடும் இந்த விடயங்களைக் கையாள்வதே பொருத்தம் .

இதனால் எந்த பாதகமும் தமிழ் மக்களுக்கு வராது. கடந்த காலங்களில் நாங்கள் ஓர் இலக்கை நோக்கி நகர்ந்திருக்கிறோம். அந்தக் காலகட்டத்தில் இலங்கை அரசோடும், இந்திய இராணுவத்தோடும் சிலர் சென்றிருந்தனர். இவ்வாறு பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இங்கு நாங்கள் பிழை பிடிப்பது நோக்கமல்ல. அல்லது யார்மீதும் குற்றம் சுமத்துவதும் நோக்கமல்ல. தனிநாட்டு கனவோடு பயணித்த நாங்கள் யுத்தம் முடிவுற்ற பின்பும் அதே கனவோடு ஒரே அணியாகப் பயணித்தோம். ஆனால் ஒற்றுமையாக செல்ல முடியாத மனதை நெருடுகின்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாகத் தம் தன் கட்சிகளை வளர்க்கின்ற செயற்பாடுகள் நெருக்கடிகளைத் தந்தன. அவற்றை சீர்செய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்தத் தேர்தல் புதிய ஒழுங்கு முறையை உருவாக்கும். இந்த தேர்தலின் பெறுபேறுகள் தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைக்கான பாதையைத் திறந்துவிடும் என்று நம்புகிறேன்.

இப்பொழுதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. அது உடைந்துபோய் இருப்பதாகக் கருதி அதனைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு கட்டியெழுப்பப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டால் அதற்காக செல்ல முடியும்.

செய்திகளின் பிரகாரம், ஏனைய கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளன என்றே அறிய முடிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்திலும், வெளியிலும் ஒன்றாகவே உள்ளது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேச்சிலும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே சென்றிருக்கிறார்கள். அவ்வாறான வேறுபாடுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்கின்றோம்.

இது ஓர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல். அதில் போட்டியிடுவதற்காகவே தனித்து நிற்கின்றார்கள். இந்தப் பெறுபேறுகள் வந்த பின்னர், எல்லோருக்கும் நல்ல பாடம் கிடைக்கும். அந்த பாடத்தை சரியாக கற்றுக்கொண்டு, அதனடிப்படையில் பயணத்தை தொடரலாம் என்று நான் நினைக்கின்றேன். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உப்புவெளி பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற உயிர்வாயு நிலையத்தை ஆளுநர் பார்வையிட விஜயம்!

கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான திருகோணமலை உப்புவெளி பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாரியளவிலான உயிர்வாயு அலகு நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் புதன்கிழமை அங்கு விஜயம் செய்தார்.

இதற்காக செலவிடப்பட்ட தொகை 3 கோடியே 20 லட்சம் ரூபாவாகும். இது சுமார் 67 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பண்ணையில் மின்சாரம் தயாரிக்கும் திறன் உள்ளது.

அதுமட்டுமல்லாமல் அதிலிருந்து வெளிவரும் திரவ உரத்தை சந்தைக்கு விடுவதன் மூலம் பெருமளவு வருமானம் ஈட்ட முடியும்.



இதன்போது, ஜேர்மனியில் இருந்து வரவழைக்கப்பட்ட சில போயர் வகை ஆடுகளைப் பார்க்கும் வாய்ப்பு ஆளுநர் மற்றும் குழுவினருக்குக் கிடைத்தது.

இந்த பண்ணை கிழக்கு மாகாணத்தில் காலநிலைக்கு ஏற்ற வகையில் முதன்முறையாக இந்த ஆடுகளைக் கலப்பினப்படுத்தியமையும் விசேட அம்சமாகும்.

ஒரு கலப்பின ஆட்டின் எடை 70 கிலோவுக்கு அதிகம் இருக்கும். இதன் மூலம் ஆடுகளை வளர்க்கும் விவசாயிகள் சிறந்த வருமானத்தைப் பெற முடியும் என மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முதுபண்டா, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் எம்.பாசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி இரண்டாவது காலாண்டிலேயே கிடைக்கும்

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கான சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒப்புதல் 2023 இன் இரண்டாம் காலாண்டு பகுதியிலேயே சாத்தியமாகும் என ஸ்டான்டர்ட் சார்டெட் குளோபல் ரிசேர்ச் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி தொடர்பான உத்தரவாதங்களைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதமே இவ்வாறான எதிர்வுகூறலிற்கு வருவதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ள ஸ்டான்டர்ட் சார்டெட் குளோபல் ரிசேர்ச், இதனால் வர்த்தக கடன்வழங்குநர்களுடான பேச்சுகள் தாமதமாகலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இவற்றின் காரணமாக இலங்கைக்கான சர்வதேச நாணயநிதியத்தின் உதவி இரண்டாவது காலாண்டு பகுதியிலேயே கிடைக்கலாம் என ஸ்டான்டர்ட் சார்டெட்குளோபல்ரிசேர்ச்தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடன்மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கைகள் 2023 இறுதியிலேயே என எதிர்பார்க்கின்றோம் எனவும் என ஸ்டான்டர்ட் சார்டெட் குளோபல் ரிசேர்ச் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியை சந்திக்கலாம் எனவும் ஸ்டான்டர்ட் சார்டெட் குளோபல் ரிசேர்ச் எதிர்வுகூறியுள்ளது.




## போதைப்பொருள்களுக்கு அடிமையாகி வவுனியாவில் புனர்வாழ்வு பெற்றவர் பலி!

போதைப் பொருளுக்கு அடிமையாகி வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என பொலிஸார் நேற்று (வியாழக்கிழமை) தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் வசித்து வந்த 2 பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகிய நிலையில் அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி புனர்வாழ்வுக்காக வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரது உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியால் அவரது சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதிகரித்த ஐஸ் போதைப் பொருள் உட்கொண்டமையால் நுரையீரல் மற்றும் உடற்பாகங்களில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மரணம் ஏற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படாத போதும் விடுவிப்பு எனச் சிலர் தம்பட்டமடித்து அரசியல் செய்கிறார்கள்!

## அருட்தந்தை மா.சத்திவேல் கண்டிப்பு



அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாத போதும் விடுதலை என சிலர் தம்பட்டம் அடித்து அரசியல் செய்வதை அவதானிக்க முடிகின்றது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கண்டிப்பதாக அதன் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதி ரணில் தலைமையிலான தரப்பினருக்கும் இடையில் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடல் மீண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நல்ல செய்தி வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அத்தகைய செய்தியை அரசு தரப்பினரால் உத்தரவாதப்படுத்தப்படாத நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 14 வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்தன் தொடர்பில் நீதிவான் நீதிமன்றில் விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் அது சட்டமா அதிபர் திணைகளத்தினால் வழக்கு தொடர முடியாத நிலையில் மீள பெறப்பட்டுள்ளது. இது விடுதலை என ஒரு சிலர் தம்பட்டம் அடித்து அரசியல் செய்வதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு ஆதித்தனுக்கு எதிராக இன்னுமொரு வழக்கிற்கு நாளும் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் அரச தரப்பினரோடு இறுதியாக நடந்த சந்திப்பின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகக் கருத்து வெளியிட்ட சுமந்திரன் 'மீண்டும் ,மீண்டும் பழைய கதையையே கூறிக் கொண்டிருக்கின்றார். உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் தொடர்பான பட்டியல் தாருங்கள்' எனக் கேட்கின்றார்கள். 'அதனை தயாரித்துக் கொடுப்போம்'எனவும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

அரசியல் கைதிகள் ஐந்து பேரின் விடுதலை தொடர்பாகவும் பேசப்படுகின்றது. யார் இந்த ஐந்து பேர்? இவர்களைத் தெரிவு செய்யும் உரிமை யாருக்கு உள்ளது? எனவும் கேட்கின்றோம். அரசியல் கைதிகள் அத்தனை பேரையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்த பின்னரே அரச தரப்பினரோடு பேச்சில் ஈடுபடல் வேண்டும். இல்லையெனில் அது அரசிற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களைக் கரை சேர்க்கும் தரகு செயலாகவே நாம் கருதுகிறோம். இது இவ்வாறே அமையுமெனில் பேச்சில் ஈடுபடும் தரப்பினருக்குத் தமிழர்கள் ஜனநாயக ரீதியில் நல்ல பாடத்தைக் கற்பிப்பர்.

அதுமட்டுமல்ல அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், இராணுவத்தினர் கையகப்படுத்தி உள்ள காணிகள் விடுவிக்கப்படல் வேண்டும், பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி வேண்டும் எனும் கோரிக்கை மிக நீண்ட காலமாக ஆட்சியாளரிடம் முன்வைக்கப்பட்ட போதும் அது செவிட்டு யானையின் முன்னால் ஊதிய சங்கொலியாகவே உள்ளது. இந்த நிலையில் மீண்டும் பட்டியல் தாருங்கள் எனக் கேட்கின்றார்கள் இவர்கள் கொடுக்கப் போகின்றார்கள் என்றால் யாரை ஏமாற்றுவதற்கு இந்த நாடகம்.

நாம் ஜனாதிபதிக்கும், அரசிற்கும், தற்போது பேச்சில் ஈடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் கூறுவது உங்கள் அரசியல் திருவிழாக்களுக்காக அரசியல் கைதிகளைத் தோரணங்கள் ஆக்காதீர்கள்.

இவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டு துன்பங்களை அனுபவிப்பது உங்களின் பொங்கலுக்காகவும், உங்களின் சுதந்திர தினத்துக்காகவும் அல்ல. தன்மான அரசியலுக்காக, கௌரவமான அரசியல் சுதந்திரத்துக்காக என்பதை உணருங்கள். காலம் தாழ்த்தி என்றாலும் இதனை மதித்து அவர்களின் விடுதலையை உறுதி செய்யுங்கள். அவர்களை உதிரிகளாக விடுதலை செய்ய நினைப்பது தமிழர்களை அவமானப்படுத்தும் செயலாகவும் இதனை செய்து தமிழர்களின் சாபத்தை பெற்றுக் கொள்ள வேண்டாம் எனவும் கூறுகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேல் சிறையில் வாடும் வசந்த முதலிலேயே விடுதலை செய்யப்படல் வேண்டும். அதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இவரது கைதுக்கு எதிராக கோம் எழுப்புபவர்கள் வீதியில் நிற்பவர்கள் ஒன்றை உணர வேண்டும். பயங்கரவாதத் தடை சட்டம் உங்களின் ஆதரவுடனேயே கடந்த 44 ஆண்டு காலமாக சிங்கக்கொடியின் ஆசிர்வாதத்துடன் பாதுகாப்பில் உள்ளது.

உங்களால் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள் தான் அரசியல் என நாம் கூறுகின்றோம். அவர்களே சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். 44 வருட காலமாகத் தமிழர்கள் அனுபவிக்கும் வேதனையைப் புரிந்து கொண்டு அரசியல் கைதிகளாக உள்ளவர்களையும் நிபந்தனை இன்றி விடுவிக்குமாறு அரசிடம் கோரிக்கை வையுங்கள். தமிழர்களுக்கான அரசியல் நீதியை வலியுறுத்துங்கள்.

அதுவே நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும். அதுவே உங்கள் போராட்டத்துக்கும் வலு சேர்க்கும். – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசம், ஒரு தடையா?

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி



கடைசியாக, அங்கே சுற்றி, இங்கே சுற்றி, தமிழர் தரப்பு பதின்மூன்றாவது திருத்தம் சார்ந்த அரசியல் தீர்வை ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை, அரசுடனான பேச்சுவார்த்தைகளில், கூட்டமைப்பு பிரதிநிதிகள் எடுத்த நிலைப்பாட்டின் சாராம்சம் இதுதான்.

இதுவே, இடைக்கால தீர்வாகவே கூட இருக்கலாம். கால – நேரம் கருதி, விரிவான பேச்சுவார்த்தைகள் மூலம், முடிவான ஒரு தீர்வுத்திட்டம், ஒரேயடியாகவோ, அல்லது தவணை முறைகளிலோ, எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படலாம். முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதில், வேதனையான விடயம் இரண்டு. ஒன்று – பதின்மூன்று சார்ந்த திட்டத்தை, இடைக்கால தீர்வாகக் கூட விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டிருந்தால், தமிழர் சமுதாயம் இந்தனை அழிவுகளையும், ராஜீவ் காந்தி படுகொலை சம்பந்தமான அவப்பெயரையும் தவிர்த்திருக்கும். அது போன்றே, அன்று பதின்மூன்றில் துவங்கியிருந்தால், இன்று சமஷ்டி உள்ளிட்ட பல்வேறு விதமான தீர்வுத் திட்டங்களை அடுத்தடுத்த கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் மூலமே பெற்றிருக்க முடியும்.

விடுதலை புலிகளின் காலத்தில், இது போன்ற தீர்வு சாத்தியமில்லை என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், போர் முடிந்த பிறகு, மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் கூட்டமைப்பு நடத்திய பேச்சுவார்த்தைகளில் இது குறித்த சில – பல விடயங்களில் ஒருமித்த கருத்து தோன்றியிருந்தது.

உதாரணத்திற்கு, கடந்த செவ்வாய்க்கிழமை, அரசுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது, காணி குறித்து சுமந்திரன் பிரஸ்தாபித்த தேசிய காணி ஆணைக்குழு மூலமான தீர்வு அப்போது உருவானது தான். ஆனால், அந்த பேச்சுவார்த்தை முடிவுறாமலே அரசினால் கைவிடப்பட்டதால், அந்த தீர்வும் முன்னெடுக்கப்படவில்லை.

அவ்வாறு கைவிடப்பட்டதற்கு காரணம், போர்குற்றங்கள் குறித்து அமெரிக்கா தலைமையில் மேலைநாடுகள், ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடம் புகார் அளித்தது கூட்டமைப்பின் அழுத்தத்தினால்தான் என்று சுமந்திரன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்த கருத்தினால்தான். வெண்ணெய் திரண்டுவந்த போது தாமியை உடைத்த கதை.

### முன்னுக்குப் பின் முரண்

இன்று போன்றே அன்றும், குறிப்பாக, பொலிஸ் அதிகாரம் மற்றும் மாகாண சபைகளின் துணை சட்டம் இயற்றும் அதிகாரங்கள் குறித்து சரியான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. ஆனால், இந்த இரு விடயங்கள் தொடர்பிலும், பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. உள்வாங்கப்பட்டன.

அதில், குறிப்பாக பொலிஸ் அதிகாரம் குறித்த விவாதத்தில், அரசு தரப்பே, முன்னுக்கு பின் முரணான யோசனைகளை முன்வைத்து, தானும் குழம்பி, கூட்டமைப்பு தரப்பினரையம் குழப்பத்தில் ஆழ்த்தியது. அதற்கு, ஜனாதிபதி மஹிந்த மற்றும் அன்றைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய இருவரிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக இருந்ததாகக் கருதப்பட்டது.

பொலிஸ் அதிகாரம் குறித்து நல்ல தீர்வு கிடைக்காமல், தமிழர் தரப்பு, எந்த விதமான இணக்கப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாது என்பதை மஹிந்த அறிந்தே வைத்திருந்தார். இறுதிச் சுற்று பேச்சுவார்த்தை முடிவதற்கு முன்னர், பொலிஸ் அதிகாரம் குறித்து அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்டுவதில் அவர் ஆர்வமாக இருந்தார் என்றும் செய்திகள் தெரிவித்தன.

இன்றும் அதே வாய்ப்பு மஹிந்தவின் வாசல் கதவை மீண்டும் தட்டுகிறது. இன்று இல்லை என்றாலும், அடுத்த தேர்தலுக்கு முன்னர், தீர்ந்த தீர்வு ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுப்பார் என்றால், அன்றும் அவர் மஹிந்தவின் ஆதரவை நம்பியே தனது வலது காலை முன்னெடுத்து வைக்கவேண்டும்.

தற்போது இடைப்பட்ட காலத்தில், அவர் வழங்குவதற்குத் தயாராக இருக்கும் பதின்மூன்று சார்ந்த அதிகாரங்கள் கூட, ரணில் – மஹிந்த இணக்கப்பாடு மூலமே அரசினால் முன்னெடுக்கப்படும். எனவே, தமிழர் தரப்பு தீர்வு திட்டம் குறித்து, தென்னிலங்கையில் தங்களது நட்பு கட்சி என்று கருதும் சஜித் பிரேமதாஸ தலைமையோடு அடுத்தடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள் குறித்த கருத்தாடல்களை இப்போதே மேற்கொள்ள வேண்டும்.

### தார்மீக உரிமை

இது இப்படி என்றால், செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தையில், சுமந்திரன் அடிக்கோடிட்டு காட்டிய தேசிய பாடசாலைகள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் குறித்த பிரச்சினைக்கும் தமிழர் தரப்புகளே காரணம். அதனை இப்பொழுதாவது தமிழர் தரப்புகள் ஏற்றுக்கொண்டு செயல்பட்டால் மட்டுமே அவர்களால் உண்மையிலேயே அடுத்த கட்டத்தை அடைய முடியும்.



எப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் பதின்மூன்று சார்ந்த அதிகார பகிர்வை எதிர்த்ததோ, அப்போதே தமிழர் தரப்பு, தற்போதும், தேசிய பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் பிரச்சினையை எழுப்பும் தார்மீக உரிமையை இழந்து விட்டது. தமிழர் தவிர, அதிலும் வடக்கு மாகாணம் தவிர்த்த பிற எட்டு மாகாணங்களிலும், குறிப்பாக சிங்கள தரப்பினருக்கு அதிகாரப் பகிர்வு குறித்த எண்ணமோ, கருத்தோ, ஏன், அறிவோ கூட இல்லை.

பதின்மூன்றாவது திருத்தமும் அதோடு ஒட்டி மாகாண சபைகளும் அமைக்கப்பட்ட முப்பத்தைந்து வருடங்களுக்கு பின்னர், இப்போது தான், ஒரு முன்னாள் சிங்கள மாகாண முதல்வர் அதிகார பகிர்வு குறித்து பேசியுள்ளார். முன்பு மாகாண முதலமைச்சராக இருந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்கா, தேசிய பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளை நிறுவியது தவறான விடயம் என்றும் பேச்சுவார்த்தையின் போது கூறினார்.

எனவே, தமிழர் தரப்பும் இது விடயத்தில் பழைய விடயங்களைக் கிளறாமல், இனி முன்னேறுவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும். அந்த விதத்தில், தற்போது அரசுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தி வரும் கூட்டமைப்பு, தமிழ் சமுதாய தரப்பினரின் கருத்துகளையும் அவ்வப்போது உள்வாங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், கடந்த மஹிந்தா ஆட்சி காலத்தில் நடந்தது போலவே, தற்போதும், சமூக அமைப்புகள், அரசுடனான பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும். முட்டுக்கட்டை போடும்.

### நல்லெண்ண நடவடிக்கைகள்

இதற்கிடையே, பதின்மூன்று குறித்து பெயரிடாமல் நடத்தப்படும் இந்த பேச்சுவார்த்தைகள் அடுத்த கட்டத்தை அடைவதற்கு முன்னர், அரசு, தமிழர் தரப்பு, போர் முடிந்த கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக முன்வைத்து வரும் நல்லெண்ண நடவடிக்கைகளை உடனடியாகவே செயல்படுத்த வேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது. அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணி விடுவிப்பு விவகாரங்களை அரசு இழுத்தடிப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

இதில், என்ன பிரச்சினை என்று அரசு தரப்பு தெளிவாக கூற வேண்டும். அல்லது, கூட்டமைப்பிடம் கூறியிருந்தால், அவர்கள் அதனை வெளியிட வேண்டும். பின்னர், அது குறித்து கலந்து பேசி நல்ல முடிவை எட்டலாம். மாறாக, இன்று போய் நாளை வா என்ற கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்தால், அதனால், சர்வதேசத்தின் நம்பிக்கையை இழக்கப்போவது அரசு தான். தமிழர் தரப்பு அல்ல.

தற்போதைய பொருளாதார சூழலில், அரசு சர்வதேசத்தின் நம்பிக்கையை பெறுவதும், அதனை தக்கவைத்துக்கொள்வதும், காலத்தின் கட்டாயம். அதனை செய்ய தவறியதாலேயே மஹிந்தா அரசு தனது சர்வதேச செல்வாக்கை இழந்தது, என்பதையும் ரணில் தரப்பு நினைவில் கொள்ளவேண்டும்.

### நடைமுறை சாத்தியம்

ஆனால், இதுவே, போர்க் குற்றங்கள் குறித்த பொறுப்புகூறல் விவகாரத்திற்கு பொருந்துமா, என்றால் இல்லை என்றே பதில் வரும். தமிழர் தரப்பும், புலம்பெயர்ந்தோரும், சர்வதேசமும், என்ன தான் செய்தாலும், இந்த அரசோ, கொழும்பில் பதவியில் இருக்கும் வேறு எந்த அரசோ, அவர்கள் எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை எடுக்காது. ஆனால், அவ்வாறு எடுப்பதாக பாவ்லா காட்டும். அவ்வளவு தான். அதற்கான காரணம் சொல்லி தெரிய வேண்டியதில்லை.

தமிழர் தரப்பு அரசியல் கைதிகள் விவகாரத்தில் முன்வைக்கும் கோரிக்கைகள், காணமால் போனோர் குறித்த பொறுப்புகூறல் பிரச்சினைக்கும் பொருந்தும். அல்லது, அவ்வாறான மனநிலையிலேயே அரச தரப்பு தமிழர் கோரிக்கையை அணுகும். அணுக முடியும்.

காரணம் இந்தப் பிரச்சினை, சுமார் இரண்டு இலட்சம் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை சார்ந்தது. அது குறித்து தமிழர் எதிர்பார்க்கும் எந்த முடிவையும் அரசு எடுத்து விடமுடியாது. இதில் தமிழர் தரப்பு எதிர்பார்ப்புகளே, அரசின் மீதான சர்வதேச அழுத்தத்தை ஒட்டியே இருந்து வந்துள்ளது.

எனவே, இது குறித்து, தமிழர் தரப்பு மிகவும் தீர்க்கமாக ஆலோசித்து தங்களது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றி அமைத்துக் கொண்டால் மட்டுமே, பிற விடயங்களிலாவது எதிர்பார்த்த முன்னேற்றங்கள் ஏற்படும். அல்லது ஏற்படலாம். அதாவது, காணாமல் போனோரை இறந்துவிட்டனர் என அரசு அறிவித்து, அந்த குடும்பங்களுக்கு உரிய இழப்பீடுகள் கொடுக்க வழி செய்யலாம். இதுவே நடைமுறை சாத்தியமான விடயம்.

### நகைப்பிற்குரிய விடயம்?

மஹிந்த, கோட்டாபய மற்றும் இரண்டு முன்னாள் இராணுவ அதிகாரிகளை, கனடா அரசு, அந்த நாட்டிற்குள் செல்வதற்கு தடை விதித்துள்ளது குறித்து, உள்நாட்டிலுள்ள தமிழ் சமூகமும் புலம்பெயர்ந்தோரும் வெற்றி விழா கொண்டாடுவது நகைப்பிற்குரிய விடயம். என்றே தோன்றும். என்றாலும், இதில், சர்வதேசத்தின் ஆழமான எதிர்கால நடவடிக்கைகள் பொதிந்துள்ளன.

நால்வரில், கோட்டாபய தவிர்த்த மூவரும் கனடா நாடு செல்வதற்கு கனவிலும் நினைக்காதவர்கள். அவர்களுக்கு இந்த தடை ஒரு பொருட்டே அல்ல. கோட்டாபய கூட அமெரிக்காவில் இரட்டை குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்தாரே தவிர, கனடா செல்வதற்கு விரும்பியவராகத் தெரியவில்லை.

கோட்டாவும் சரி, இன்னமும் அவர்களது மற்றொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷவும் சரி, அவர்களின் அமெரிக்க நாட்டம், நாடறிந்த விடயம். அவர்களில் கோட்டா, தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பு அதிகம் என்று தெரிந்த பின்னரே, இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, அமெரிக்காவில் குடியுரிமையை ரத்துச் செய்தார்.

ஆனால், பஸில், தாய்நாட்டை விட அயல் நாடு, அதிலும் குறிப்பாக அமெரிக்காவை முக்கியம் என்று, நாடாளுமன்ற நியமன உறுப்பினர் பதவியை கூட இராஜினாமா செய்தார். பஸில் என்ற தனி நபர், நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரராகவும் ஆவதற்காகவே, கோட்டா – மஹிந்தா அரசு, சட்டத்தையே திருத்தி அமைத்தது.

என்றாலும், தென்னிலங்கை மக்கள் அதே பஸில், அதே கோட்டா ஆகியோரை இந்த நாட்டின் தலைவர்களாக ஏற்றுக்கொண்டதாய், யாருமே, எந்தவொரு இலங்கை குடிமகனும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் தான். என்ன, மனித உரிமைகள் குறித்த கனடா அரசின் கரிசனைகளுக்கு அப்பால் சென்று, இந்த முடிவும் கூட, அந்த நாட்டில் வாழும் புலம்பெயர்ந்தோரையும் அவர்களது வாக்கு வங்கியையும் மனதில் வைத்து எடுக்கப்பட்டதே.

### ஒரே தட்டில்...

அந்த விதத்தில், தற்போதைய ரணில் அரசு சார்பில், வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்றி, கொழும்பில் உள்ள கனடா நாட்டின் துணை உயர் ஸ்தானிகரை வரவழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது, ஒரு இராஜரீக நடவடிக்கை மட்டுமே என்று கருதிவிட முடியாது. அதுவே, கனடா அரசு எதிர்பார்த்த விடயமாகவும் இருக்கலாம்.

அரச தலைவர்களையும், குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளான முன்னாள் இராணுவ அதிகாரிகளையும் ஒரே தட்டில் வைத்து நிறுத்துப்பார்க்கும் கனடா நாட்டு தலைமையின் போக்கு, அடுத்தடுத்து வரும் ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூட்டங்களில், சர்வதேசம் எடுக்கும் நிலைமைக்கு கட்டியம் கூறுவதாகவே எடுத்துக்கொள்ளப்படும். எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறானால், தற்போது துவங்கியுள்ள அரசுடனான தமிழர் தரப்பின் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஒரு முறை தடுத்து நிறுத்திய புண்ணியத்தை சர்வதேசம் கட்டிக்கொள்ளும். குறிப்பாக, கூட்டமைப்பு. அதிலும் முக்கியமாக சுமந்திரன் போன்றோர், கனடா நாட்டின் முடிவு குறித்து வெளியிடும் கருத்தில் மட்டுமே பேச்சுவார்த்தையின் எதிர்காலம் ஊசலாடுகிறது.

வேண்டுமென்றால், சர்வதேசம், அரசிற்கு அழுத்தம் கொடுப்பதாக இது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது என்று கூறிக்கொள்ளலாம். உண்மை எதுவானாலும், அதன் விளைவு எதிர்மறையானதே. அனைவரும் அறிந்ததே. அறிந்திருந்தும், அதே தவறை, சர்வதேசம் மீண்டும் மீண்டும் செய்ய விழைகிறது. தமிழர்களை போலவே, அவர்களும், மீண்டும் மீண்டும் பிழைவிடுகிறார்களா?

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# தைப்பொங்கல் திருநாள் என்ற புரட்சிப் பெருநாள்

## மகர சங்கராந்தி பற்றிய மகத்தான கருத்துகள்

— சிவஸ்ரீ. தி.மயூரகிரிக்குருக்கள் —



அண்மைக் காலமாக தைப்பொங்கல் விழா தமிழர் பண்டிகை என்றும் தமிழர் திருநாள் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது.

ஆனால், உண்மையில் இவ்விழாவை தமிழர்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினாலும், இவ்விழாவை பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இந்துக்களும் பல்வேறு பெயர்களில் ஒரே நாளில் கொண்டாடுவதை அவதானிக்கலாம்.

தென்னாசியப் (பாரத) பரந்த நிலப்பரப்பு,வானிலை மற்றும் பன்முக பண்பாடு காரணமாக பல்வேறு பெயர்களிலும் பல்வேறு வரலாறுகளுடனும் இவ்விழா கொண் டாடப்படுகிறது.

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் கும்பமேளா, மகர சங்கராந்தி அன்றுதான் தொடங்குகிறது. சங்கராந்தி தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளில் பலவாறு கொண்டாடப்படுகிறது.

தமிழர்களால் பொங்கல் திருநாளாக கொண்டாடப்படும் இவ்விழா, மகர சங்கராந்தி அல்லது சங்கராந்தி – உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், ஒரிசா, மணிப்பூர், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம்,தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கோவா பகுதிகளில் அறியப்படுகிறது.

உத்தராயண் என்று குஜராத் மற்றும் இராஜஸ்தான், லோரி – இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் பகுதிகளில் கொண்டாடப்படுகிறது.

ஆச்சர்யம் யாதெனில், நேபாளம் தாரு மக்கள் இதனை மாகி என்றும், பிற இடங்களில் – மாகே சங்கராந்தி அல்லது மாகே சங்கராதி என்றும், தாய்லாந்தில் சொங்க்ரான் என்றும், லாவோஸில் பி மா லாவ் என்றும் மியன்மஜுரில் திங்க்யான் என்றும் இவ்விழா நிகழ்கிறது.

கேரளாவில் மகர ஜோதிப் பெருவிழா இதே நாளில் சபரிமலை உள்ளிட்ட பல்வேறு தலங்களிலும் நிகழ்கிறது.

சங்கிராந்தி என்னும் சொல்லின் பொருள் இந்தப் பண்டிகையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.சமயக் + க்ராந்தி = சங்கிராந்தி. அதாவது சரியான புரட்சி. சமுதாயத்தில் நல்ல விதமான மாற்றங்களை ஏற்படுத்தும் புரட்சியைச் சரியான புரட்சி என்று சொல்லலாம். அத்தகைய புரட்சியை விழையும் நல்லுணர்வின் வெளிப்பாடுதான் இந்தப் பெயர்.

தமிழகத்தின் பொங்கல் பண்டிகையிலும் இந்தப் ‘புரட்சி’ என்னும் அம்சம் இருக்கிறது. கடும் உழைப்புக்கும் மழைக்காலத்துக்கும் குளிர் காலத்துக்கும் பிறகு வரும் அறுவடைக் காலம் இந்தத் தினத்தில்தான் தொடங்குகிறது.

உழைப்பின் பலனை அறுவடை செய்யும் நாள் இது. உழவுக்குத் துணை செய்த கால்நடைகளை ஆராதிக்கும் நாள். புதிய வளத்தை, புதிய உற்சாகத்தையும், புதிய மாற்றத்தையும் கொண்டுவருகிறது. எனவே பொங்கல் பண்டிகையிலும் சமுதாயத்திற்குத் தேவையான புரட்சி இருகிறது.

‘உத்தர்’ என்றால் வடமொழியில் வடக்கு என்று பொருள். ’அயனம்’ என்றால் வழி என்று பொருளாகும். சூரிய பகவான் தென்திசையிலிருந்து வடதிசை நோக்கி பயணம் செய்யும் காலமே உத்தராயணம் எனப்படும்.

தை, மாசி, பங்குனி, சித்திரை,வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்களும் உத்தராயண காலமாகும். நம்முடைய ஆறு மாத காலம் தேவர்களுக்கு பகல் பொழுதாகும். உத்தராயணம், தட்சிணாயனம் ஆகிய இரு அயன காலங்களில் உத்தராயணம் மிகவும் புனிதமான காலமாகும்.

தைமாதம்பிறக்கப்போகிறதுஎன்றுஎண்ணும்போதே நம் அனைவர் மனதிலும் உற்சாகம் ஊற்றெடுக்கும். சுப விசேங்களைச் செய்வதற்காக தைமாதம் எப்போது பிறக்கும் என பலரும் காத்திருப்போம். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் ஏதுமின்றி எல்லோரும் குடும்பத்துடன் பொங்கல் வைத்துக் கொண்டாடும் விழா நாளோடு தொடங்கும் மாதமிது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நம் நாட்டில் உழவர்களுக்கான திருநாளைக் கொண்டாடுவதும், காலமெல்லாம் நம்மோடு சேர்ந்து உழைக்கும் கால்நடைகளை சிறப்பிக்கும் பொருட்டு கொண்டாடப்படும் மாட்டுப் பொங்கல் திருநாளும், நண்பர்கள், தெரிந்தவர்கள் என ஒருவருக்கொருவர் ‘பால் பொங்கியாச்சா…?’ என்று பரஸ்பரம் உபசரித்துக் கொள்ளும் பழக்கத்தை காணும்பொங்கலாகக் கொண்டாடுவதும், சீறி வரும் காளைகளை அடக்கத் தோள்கள் துடிதுடிக்க இளைஞர்கள் திமிறிப் பாயும் ஜல்லிக்கட்டு திருவிழாவும் தமிழர்களின் தை மாதத்தின் தனிச்சிறப்புகள் எனலாம்.

வட இலங்கையில் மாட்டு வண்டில் சவாரி போட்டிகளும் வடமராட்சி பட்டப்போட்டிகளும் இவ்விழாவோடு ஒட்டிய தனிச்சிறப்பு பெறுகின்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும்… என்பது அனைவரும் அறிந்த சொல்வழக்கு. உழவுத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட நம் நாட்டில் ஆடிப்பட்டத்தில் தேடி விதைத்து, ஆறுமாதம்

கழித்து அறுவடை முடித்து, சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பொங்கல் வைத்து வணங்குவர்.

அறுவடை செய்த பயிரை விற்றுப் பணம் சம்பாதிப்பது தை மாதத்தில் என்பதால் தை மாதத்தில் திருமணம், வீடு கட்டுதல் முதலான சுபதிட்டங்களை மேற்கொள்ளலாம். கையில் பணமின்றி இந்தத் திட்டங்களைத் தள்ளி வைப்போருக்கு, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற அர்த்தத்தில் கிராமத்துப் பெரியவர்கள் சொல்வார்கள்.

சங்க காலத்தில் பொங்கல் விழாவைத் தமிழர்கள் இந்திர விழாவாக, தை மாதம் முழுவதும் கொண்டாடினராம். இந்த விழாவிற்குப் பல மாதங்களுக்கு முன்னர் அதாவது ஆடி மாதமே மழை வேண்டி இந்திரனைக் குறித்து விரதம் இருப்பார்களாம்

தை முதல் ஆனி மாதம் வரையிலான காலகட்டம் உத்தராயணம் எனப்படும். இந்த ஆறு மாத காலத்தை எல்லா சமூகத்தினரும் உழைத்து சம்பாதிக்க வேண்டிய காலமாக வகுத்திருந்தனர். ஆடி முதல் மார்கழி வரையிலான தட்சிணாயனம் எனும் ஆறு மாத காலத்தை தேவர்களைப் பூஜிப்பதற்கும்,ஆலயம் கட்டுதல், குளம் வெட்டுதல் போன்ற பொதுச் சேவையில் ஈடுபடுவதற்கான காலமாகப் பிரித்தார்கள்.

அனைத்துமை தரப்பினரும் உத்தராயணத்தில் சம்பாதித்த பொருளை தட்சிணாயனத்தில் செலவழித்தனர். கையிருப்பு கரைந்தவுடன் மீண்டும் தை மாதம் முதல் பொருள் தேடத் துவங்குவர். புதிதாகத் தொழில் தொடங்குவதற்கு உகந்த மாதமாக தை மாதத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

யாகங்களைச் செய்து வரும் வேத விற்பன்னர்கள் சிராவண மாதம் பௌர்ணமியில் (ஆவணி அவிட்டம்) இருந்து மார்கழி மாத பௌர்ணமி வரை, சர்ப்ப பலி எனும் யாக பூஜையைச் செய்வது வழக்கம். இதற்குக் காரணம் இந்த இடைப்பட்ட காலத்தில்தான் விஷப் பூச்சிகள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியில் வரும் என்பதலாகும்.

அக்காலத்தில் மனிதர்கள் செல்லும் பாதையில் இந்த விப்பூச்சிகளால் பலவிதமான தொல்லைகள் உண்டாவது வழக்கம். மனிதர்களால் இந்த ஜந்துக்களுக்கும், பூச்சிகளால் மனிதர்களுக்கும் பரஸ்பரம் எவ்வித பாதிப்பும் நேரக்கூடாது என்பதால் காட்டில் வசித்து வந்த ரிஷிகளும்,சந்யாசிகளும் கூட ‘சாதுர்மாஸ்ய விரதம்’ என்று, தம் இருப்பிடத்தை விட்டு வெளியில் வராமல் விரதம் காப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

தை மாதப் பிறப்பிலிருந்து இந்த ஜந்துக்கள் தங்கள் இருப்பிடத்தில் தஞ்சம் புகுந்து விடும் என்பதால் தை மாதத்தில் மனிதர்கள் செல்வதற்கு பாதை (வழி) நல்லபடியாக அமைந்தது.

தட்சிணாயனம் முடிந்தபின் தொடங்கும் உத்தராயணம், தை மாதம் முதல் திகதியில் ஆரம்பமாகிறது. சூரியன் தனது பாதையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மாற்றிக் கொள்ளும் நேரம். தேவர்களைப் பொறுத்தவரை ஒரு வருடம் என்பது ஒரு நாள் அளவே.

இதில் உத்தராயணம் என்பது பகல் பொழுதாகவும், தட்சிணாயனம் என்பது இரவு பொழுதாகவும் இருக்கும். ஜோதிட ரீதியாக சூரியனை வலது கண்ணாகவும், சந்திரனை இடது கண்ணாகவும் குறிப்பார்கள். தை மாதத்தின் முதல் திகதி தேவர்களுக்கு பகல் பொழுது துவங்குகிற காலம்.

தேவர்கள் உறக்கத்தில் இருந்து எழும்போது அவர்கள் முதலில் வலது கண்ணையும், அதனைத் தொடர்ந்து இடது கண்ணையும் திறக்கின்றனர். அதனால் தான் பொங்கல் நாளன்று சூரிய, சந்திரர் படம் வரைந்து பூஜிக்கிறோம். தட்சிணாயனம் முழுவதும் நமது பூஜைகளை ஏற்றுக் கொள்ளும் தேவர்கள் தங்கள் விழிகளைத் திறந்து நம் மீது அருட் பார்வை வீசுகின்ற நேரம்.

தை பிறந்தால் விழி திறக்கும் என்பது திரிந்து தை பிறந்தால் வழி பிறக்கும் என்று மாறியிருக்கலாம் என்பது ஜோதிட ஆராய்ச்சியாளர்களின் கருத்து. தை பிறந்தால் தேவர்களின் விழி திறந்து மனிதர்களாகிய நமக்கு வழி பிறக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஜோதிட அறிவியலைப் பொறுத்தவரை உணவு, விவசாயம், நீர்வளம் ஆகியவற்றை வழங்கும் கோள் சந்திரன். முழு நிலவாக ஒளிவீசும் பௌர்ணமி நாள் தை மாதத்தில் வரும்போது மட்டுமே, தனது சொந்த வீடான கடகத்தில் சந்திரன் ஆட்சி பலத்துடன் அமர்ந்திருப்பார். ஆகவேதான்

கடும் வெயிலோ,அதிக வெப்பமோ,அல்லது அதிக மழையால் வெள்ளமோ இன்றி விவசாயத்திற்கு ஏற்றஇதமான தட்பவெப்பநிலையை தை மாதத்தில் காண்கிறோம். பௌர்ணமியுடன் கூடிய தைப்பூச நாளன்று ஆங்காங்கே அன்னதானம் நடைபெறுவதைக் காண்கிறோம்.

சந்திரனுக்கு உகந்த அந்த நாளன்று அன்னதானம் செய்வோருக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக வாழ்வினில் வளம் பெருகும். தை மாதம் முழுவதும் சூரியன் மகர ராசியில் சஞ்சரிப்பதால் இதனை மகர மாதம் என்றழைப்பர். மகர ராசியில் சூரியனின் கிரணங்கள் சேருவதால் தை மாதத்தின் முதல் நாளை மகர சங்கராந்தி என்று அனுசரிக்கிறோம்.

இயற்கையை இறை சக்தியாகக் கொண்டு வழிபடும் இந்தப் பண்டிகை, உலகுக்கு அமுதூட்டும் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்யும் திருநாளாகவும் விளங்குகிறது. பொங்கலுக்கு முன்னும் பின்னும் நடக்கும் பண்டிகைகள் சமூகப் பார்வையையும் நம் வாழ்வுக்கு உறுதுணையாய் விளங்கும் விலங்குகளை நேசிக்கும் தன்மையையும் பிரதிபலிக்கின்றன.

இந்துக்களின் சிறப்பாக தமிழர்களின் பொங்கல் திருநாளை மகிழ்வோடு கொண்டாடுவோம். சென்ற காலப் பழுதுகளை அகற்றி புத்துணர்வோடு செயற்படுவோம். காலமும் கடவுளும் ஆசீர்வதித்து வழி நடத்த பிரார்த்திப்போம்.

அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பேராண்மையின் பார்வையில் எடுசெய் நீதி

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 237**

நாடுகடந்ததமிழீழ அரசின்பிரதமரின் எதிர்பார்ப்புகளை சிறுமைப்படுத்துவதாக கருதக்கூடாது. சர்வதேச சட்டங்களில் அமைந்துள்ள சரத்துக்களின் வியாக்கியானங்களையும் வழிமுறைகளையும் இருக்கும் இடத்திலிருந்து, பதவியில் இருந்து, அவர் கூறுகிறார்.

நாட்டின் மக்கள் யாவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள், அரசமைப்புச் சட்ட விதிகள் ஒவ்வொரு குடிமகனுக்கும் பொதுவானவை என ஸ்ரீலங்காவின் அரசமைப்புச் சட்டம் கூறுகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இவற்றின் நடைமுறைப்படுத்தலின் அனுபவங்கள் என்ன?

அவை போன்றுதான் சர்வதேச சட்ட சரத்துக்களும்.

பலஸ்தீனத்திற்கு 35க்கு மேற்பட்ட மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய நாடுகளின் ஆதரவும் சர்வதேசத்தின் மனச்சாட்சியின் அடிப்படையிலான ஆதரவும் இருப்பதால் ஐ.நாவில் அது சார்பாக எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இஸ்ரேல் தனது ஏழு நாள் போராட்டத்திற்கு முன் இருந்த எல்லைக்குள் மீள் வாங்க வேண்டும் என்றும், பலஸ்தீனியர்களின் பகுதிகளை ஆக்கிரமித்து, அவர்களின் குடி அமைப்புக்களைத் தகர்த்து, இஸ்ரேலியர்களுக்கான வீடமைப்பு திட்டங்கள் உருவாக்க கூடாது எனவும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், இஸ்ரேல் அவற்றை மதிப்பதில்லை. ஏனெனில் நீதி, நியாயங்களையும், மனசாட்சிகளையும் பாராமல், அமெரிக்கா இஸ்ரேலியர்களுக்காகவும் தங்களது புவியியல் தேவைகளுக்காகவும் நிற்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறல் விளக்கம் பற்றி ஐ.நாவின் மனித உரிமைகள் மன்று ஆக்கிய தீர்மானங்களையே ஸ்ரீலங்கா இதுவரை விட்டெறிந்து, தங்களுக்கு ஐ.நாவில் இருக்கும் ஆதரவுகளில் நம்பிக்கை வைத்துள்ளது. சீனா, ரஷ்யா இரண்டும் ஐ.நாவில் தடுப்பதிகாரம் கொண்டவையாக இருப்பதால், தங்களுக்கு எதிராக வரக்கூடிய தீர்மானங்களுக்கு எதிராக அவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை ஸ்ரீலங்காவுக்கு உண்டு.

சர்வதேச மனித உரிமைகள் மன்றில் நின்று, அங்கு அழுத்தம் தருவதுதான் வழி என்றால், எப்பொழுதுமே ஈழத் தமிழர்களுக்காக விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர், தமிழ்நாடு அரசியல்வாதி தொல் திருமாவளவன் “ஐ.நா கூட்டத்தொடர் ஆண்டுக்கு இரண்டு தடவை நடைபெற்றாலும் அதன் மூலம் இதுவரை ஈழத் தமிழர்களுக்கு எவ்விதமான தீர்வும் கிட்டவில்லை” என கவலை தெரிவித்து “பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் கொள்கை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கடந்த எட்டு ஆண்டுகளில் ஈழத் தமிழர்கள் விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை” எனவும் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ் மக்கள் நடக்கலாம், நடக்க வேண்டும். அதற்கு முதலில் நம்பிக்கை கொள்ள வேண்டும். தனி மரங்களாக, நாட்டுக்கு நாடு தங்களது கொள்கைகளுக்கோ, லட்சியங்களுக்கோ சமர்ப்பணங்களால் அழுத்தம் தருபவர்களாக நின்று விடாமல், அதற்காக நாட்டின் அரசியல் தரப்புக்களும் புலம்பெயர் அமைப்புகளும் ஒற்றுமையாக Synchronize ஆக யதார்த்தமான நோக்கங்களை முன்னெடுக்க வேண்டும். தற்சமயத்தில் தமிழ் மக்கள் முள்ளம்தண்டே உடைந்து கிடக்கும் நிலையில் இருக்கும்போது, எழுந்து நிற்



கக்கூடிய முயற்சிகளில் கவனம் வைக்க வேண்டியது முக்கியம்.

### கனடாவின் தடை - சர்வதேச பொறிமுறையா?

முன்னைய ஜனாதிபதிகள் மஹிந்தவிற்கும் கோட்டாபயவிற்கும் எதிராக தடைகள் விதித்த கனடிய அரசு, அதேசமயம் மனித உரிமை மீறல்களில் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு இடைநிலை இராணுவ அதிகாரிகளுக்கும் இந்தத் தடைகளை விதித்துள்ளது. இதில் சர்வதேச நீதி தெய்வம் போல் நின்று கொல்லும் என்ற எதிர்பார்ப்புக்களின் எச்சரிக்கைகளாகவும் மஹிந்தாவும் கோட்டாவும் இணைக்கப்பட்டது தொடர் அதிகாரத்தின் (chain of command) என்பதின் உள்ளீர்ப்பு என ஊடகங்கள் கருத்தாக்கம் செய்ய, அதில் தமிழ் மக்கள் குதூகலிக்கிறார்கள்.

பிரித்தானியா, ஆஸ்திரேலியா போன்ற வேறு சர்வதேச நாடுகளும் குறிப்பிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களாக தாங்கள் சந்தேகிக்கப்பட்டவர்கள் மீது தடைகள் விதித்துள்ளார்கள். இதில் வித்தியாசம் என்னவெனில் மதில் மேல் பூனைகளாக இருந்து கொண்டிருந்தபோது கனடா முன் வந்து மஹிந்தவையும் கோட்டாபயவையும் தொடர் அதிகாரத்தின் பேரில் தடை விதித்துள்ளது.

இவை தனிமனிதர்களுக்கு எதிரானவை. சர்வதேச நீதியின் பொறி முறையில் ஏற்பட்டவை அல்ல. அரசியல் அழுத்தங்களுக்காக சிங்கள, பௌத்த பிதாமகர்களுக்கு எதிரான தடை உத்தரவுகள் பேராண்மையினரை உறுத்தும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அமெரிக்காவும் கனடாவும் அனுசரணை நாடுகளாக சர்வதேச மனித உரிமை மன்றில் இயங்குவதால், இராமன் கட்டத் தொடங்கிய அணைக்கு அனுமார் அணி வைத்த கற்களாகப் பார்க்க வேண்டும். அணை முடிய காலங்கள் கனிய வேண்டும். ஏனெனில் இது மனித உரிமை மன்றின் முனைப்பல்ல. அதன் அங்கத்துவ நாடு, அங்கு வாழும் தமிழ் மக்களின் முயற்சிக்கு ஆதரவு தரும் வகையில் மிக முக்கியமான நடவடிக்கையாக இதனை எடுத்துள்ளது.

கனடாவின் தூதுவர் வெளிவிவகார அமைச்சினால் அழைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஸ்ரீலங்காவின் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா இருக்கும் பொருளாதார நெருக்கடியில் கனடாவுடனான இராஜதந்திர உறவுகளை முறிக்கும் சாத்தியமில்லை. ஆனால் பேராண்மைத் தரப்புகள் உள்ளூராட்சி தேர்தலைக் குறிவைத்து, சிங்கள மக்களின் உணர்ச்சிகளை உசுப்பேத்தி விடலாம். பேராண்மை சிங்களவர் இவற்றை அறிவுபூர்வமாகவும் எச்சரிக்கையாகவும் கருதும் சாத்தியங்கள் குறைவு.

### கௌரவத்தின் விளைவு என்னவாகலாம்?

மஹிந்தவும் கோட்டாபயவும் இதனைத் தங்களது தனிப்பட்ட சுயமரியாதை பாதிக்கப்பட்ட விடயமாகவே கணக்குகள் போட்டு, பேராண்மைக் கட்டமைப்பான வியத்மகவும் பொது பல சேனவும் சந்தர்ப்பத்தை பாவித்து, உள்ளூராட்சித் தேர்தலின் பிரச்சாரங்களில் பங்களிப்பார்கள். இவற்றால் உள்ளூராட்சி தேர்தல்களில் மொட்டுத் தரப்பைப் பலப்படுத்தி, அதனால் ரணில் அவர்களையே தங்கியுள்ளவராக மட்டுப்படுத்தப்பட்டு, இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பேராண்மையின் கைகளில் பழையபடி விடப்படலாம்.

தனது செயத்திறனுக்காக மஹிந்த சாதுரியமாக, சந்தர்ப்பங்களையும், நண்பர்களையும், மனிதர்களையும் பாவிப்பதை உதாரணமாக ஐ.நாவில் கலாநிதி தயான் ஜயதிலகவை பாவித்தமையைக் குறிப்பிட்டு இருந்தேன்.

அவர் தமிழ் மக்களின் கண்களை அவர்களைப் பாவித்தே குத்திக் குருடாக்கியவர்.

சில நாள்களின் முன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை கண்டு பொன்னாடை போர்த்தி பாராட்டி சென்றவர் மஹிந்தர். இப்பொழுது அவர் பராமரித்த தளபதி கருணாவும், பிள்ளையானும் தங்கள் கட்சிகளின் ஊடாக வடக்கிலும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு, வாக்குகளைப் பிரிக்க வியூகம் வைக்கிறார்.

தளபதி கருணா கருத்து வேற்றுமைகளால் விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்தபோது, சந்திரிகா அரசு அவருக்கும் அவரோடு வந்தவர்களுக்கும் பாதுகாப்பு



அளித்தது. ஆனால் கருணாவின் கட்சியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அரசியல் செய்ய இடம் தரவில்லை. ஆனால் ஜனாதிபதியாக வந்ததும் மஹிந்தா கருணாவின் கட்சியை அங்கீகரித்து, தேர்தல் அரசியலில் இறக்கி, பின்னர் கருணாவின் முக்கியத்துவத்தைக் குறைத்து, பிள்ளையானை முன்னுக்குக் கொண்டு வந்து, பேச்சுக்கு மூச்சு குழந்தைப் போராளியாக விடுதலை புலிகளுடன் இருந்த பிள்ளையான்சி முதன் மந்திரி ஆக்கினேன் என கூறுவார்.

அவற்றுக்குப் பிரதி உபகாரங்கள் பிள்ளையான் செய்தார் என்பதும், இறுக்கமான வழக்குப் பதிவில் நல்லாட்சி காலத்தில்தடுப்புகாவலில்இருந்தபிள்ளையான் வெளியேற வழிகள் பார்த்ததும், பின்னர் கோட்டாபய ஜனாதிபதியானதும் பொது மன்னிப்பில் அல்ல, வழக்குகளின் பிணைப்புகளில் இருந்து, சாட்சிகளின் தன்மைகளில் ஊழல் பெரும் பங்கு வகித்தன என்பவை சர்வதேச மனித உரிமை மன்றிலையே வலம் வரும் விடயங்களாக உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த கட்டமைப்புகளின் அதிகாரிகளும், ஈஸ்டர் தாக்குதல் குண்டுவெடிப்பில் கிடைத்த தகவல்களில் தகுந்த நடவடிக்கை எடுக்காது, அசிரத்தை காட்டினார்கள் என பிரதம நீதியரசருடன் ஏழு பேர் கொண்ட உயர்நீதிமன்ற குழாம் அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தனித்தனியாக நஷ்ட ஈடு தருமாறு பணித்துள்ளது. ஏழு பேர் கொண்ட நீதிமன்றம் என்பதால் மீளாய்வுக்கான மேல்முறையீட்டுக்கு இடம் உண்டா, அன்றில் அரசியலுக்காகத் தேர்தலின் வசதிகளுக்காக அவை கவனித்துக் கொள்வதற்கான இணக்கங்கள் ஏற்படுமா என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.

(வளரும்.....)

## புதுக் கூட்டுக் குறித்து ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும். அது தொடர்பிலும் நாளை (இன்று) பேசி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். – என்றார்.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, எம்.கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன்,வி.மணிவண்ணன், க.சர்வேஸ்வரன், குருசாமி சுரேந்திரன், விந்தன் கனகரட்ணம், சபா. குகதாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். உள்ளூராட்சிமன்றங்களின் தவிசாளர்கள், பிரதிநிதிகள் அடங்கிய 25 பேர் வரையானோரும் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## புன்னாலைக்கட்டுவனில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை சோதனையிட்ட போது , அவர்களிடமிருந்து 400 போதை மாத்திரைகள் (40 கார்ட்) மீட்கப்பட்டுள்ளன.

அதனை அடுத்து மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட இருவரையும் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## தமிழ்த் தேசிய மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்சமயம் இடம்பெறும் போட்டிகள், கட்சித்தாவல்கள் போன்றவற்றை மக்கள் தற்போது அறியும் போது இதுவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறி வந்த செய்தி உண்மையாக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரப் போட்டியில் தற்போது தமிழ்த் தேசியமக்கள் முன்னணியையும் இழுக்கப் பார்க்கிறார்கள்.

ஒரு புறத்தில் ரெலோவுடன் பேச்சுவார்த்தை ஈடுபடப் போவதாகவும் இன்னொரு பக்கத்திலே தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக போலித் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

நாம் ஒரு விடயத்தில், உறுதியாக உள்ளோம். கூட்டணி என்ற கதைக்கே இடம் கிடைக்காது

கூட்டணி ஆகட்டும் தமிழரசு ஆகட்டும் அவை ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்த கட்சிகள்.

மாறாக, மாவீரர்களின் தியாகத்திற்கு புறம்பாக செயற்படும் எவரோடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தவோ இணைந்து செயற்படவோ போவதில்லை.

தமது போலி முகத்திரை கிழிக்கப்பட்டதும் அதற்குப் பரிகாரம் தேடும் வகையில் தமிழ்த் தேசிய முனணனியையும் இணைக்கப் பார்க்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் பின் இக் கட்சிகள் ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்தமையால்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கினோம்.

இவ்வாறு கடந்த கால வரலாறு இருக்கையில் அற்ப பதவிகளுக்காக, ஒற்றையாட்சிக்குள்ளும் 13 ஆம் திருத்தத்திற்குள்ளும் தமிழ் மக்களை முடக்க முனைந்த எவருடனோ கூட்டு வைக்கமாட்டோம்.

எம் கூட்டு என்றும் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியப் பற்றாள்கள் மற்றும் மாவீரர்களின் குடும்பங்களுடனே என்றென்றும் இருக்கும்.

தமிழ் மக்களின் வாக்கைப் பெற்று தற்சமயம் பதவியிலுள்ளோர் அரசுடன் பேச்சுவார்த்தை எனும் போர்வையில் ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இவ்வாறு, இருக்கையில் எதிர்வரும் உள்ளூராட்ச்சித் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு அளிக்கும் வாக்குகள் ஒற்றையாட்சிக்கு ஆதரவான வாக்குகளாக மாறிவிடுமோ என்ற அச்ச நிலை காணப்படுகின்றது.

எனவே ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை திணிக்கும் செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் தமிழ்த்தேசிய மக்கள் முண்ணனிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எமது கூட்டு என்றும் தமிழ் மக்களுடனேயே அமையும். – என்றும் சுகாஷ் குறிப்பிட்டுள்ளார்

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

# மரண அறிவித்தல்



## சுந்தரம் டிவகலாலா

வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும், தன் வாழ் நாள்களைப் பொதுச் சேவைக்காக அர்ப்பணித்த, பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய இலங்கை பொதுச் சேவை அதிகாரியுமான யாழ் இந்துவின் மைந்தன் சுந்தரம் டிவகலாலா ஜனவரி 12 ஆம் திகதி மனைவி, பிள்ளைகள் அனைவரையும் தன் அருகில் அழைத்து பிரியாவிடை கொடுத்து, இவ் உலகைப் பிரிந்தார். அவரது இறுதிக் கிரிகைகள் நாளை 14.01.2023 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், யாழ்ப்பாணம் 127, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்**




காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்க் கட்சிகள் சேர்ந்திருந்து மக்களுக்கு என்ன செய்தார்கள்?

## அம்மான் படையணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கேள்வி

தமிழ்க் கட்சிகள் கடந்த 20 வருடமாக ஒன்றாக இருந்து தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள், தற்போது இவர்கள் பிரிந்து விட்டால் எங்களுடைய வாழ்க்கை இழந்து போய்விட்டதாகப் பேசுகின்றார்கள். ஒன்றாக இருந்து தங்கள் தங்களுடைய குடும்பங்களையும், சொந்த பந்தங்களையும் வளர்த்ததைத்தவிர தமிழ் மக்களுக்கோ தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கோ என்ன நடைபெற்றுள்ளது என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவரும் அம்மான் படையணியின் தலைமை ஒருகிணைப்பாளருமான ஜெயா சரவணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துரைக்கையில் –

மாவீரர்தினம் வந்ததும் மண்வெட்டியைத் தூக்கி வைத்துக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து பணம் பெற்றுக்கொள்வதைத்தவிர வேறு என்னத்தை செய்தார்கள், இனியும் ஒன்றும் நடைபெறப் போவதில்லை பிரிந்து செல்வது நல்லது பிரிவதால் எமக்கு ஒரு கவலையும் இல்லை. அம்மான் படையணி என்பது சமூகச்சீரழிவுகளை தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட படையணி போதைவஸ்துக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களாக குரல் எழுப்பி போராடி வருகின்றோம். எமது தலைவரிடமிருந்து அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து கொண்டு வடமாகாணத்துக்கு தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்.

எமது சிறார்களைக் காப்பாற்ற நாங்கள் எடுத்த நடவடிக்கையால் பல கிலோ போதைப்பொருள்களைக் கைப்பற்றி விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்திருக்கின்றோம். வடபகுதியில் எமது இளைஞர்களால் பல கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. அதேபோல பாடசாலைகளில் எமது படையணியின் இளைஞர்களால் கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் படையினரிடம் ஒப்படைத்துச்செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இளைஞர் யுவதிகளுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம். இவை அனைத்தும் ஒரு மூன்று மாத காலப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன.



இந்தச் செயற்பாடுகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்ளும் போது பல இளைஞர்கள் எங்களுடன் இணைந்து செயற்படுவதால் அதன் தாக்கம் வீச்சு அதிகமாக இருக்கும். எதிர்வரும் தேர்தலில் நாங்கள் போட்டியிடவுள்ளதால் இளைஞர்கள், யுவதிகள், முன்னாள் போராளிகள் எங்களுடன் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். ஏனைய கட்சிகள் எங்களுக்கு அழைப்பு விட முடியாது. ஏனென்றால் நாங்கள் தனித்துவமாக போய்க்கொண்டு இருக்கின்றோம். அழைப்புக்கள் தலைமைக்கு வந்த வண்ணம் தான் உள்ளது. ஆனால் எங்களுடன் இணைந்து செயற்பட விரும்பினால் இலஞ்சம், ஊழல் தவிர்த்து வேலை செய்ய விரும்பினால் யாராக வேண்டுமானாலும் இணைந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தந்திரம் மிக்கவுள்ள ஒருவர். 70 வருட பிரச்சினையை 4 ஆம் திகதிக்குள் தீர்வு தருவதாக அறிவித்துவிட்டார். பின்னர் தமிழ் கட்சிகள் அனைத்தும் சேர்ந்திருந்தால் தான் தீர்வைக்கொடுக்க முடியும் என்பதை அறிவிப்பார்கள். அதற்காக தமிழ்க் கட்சிகளை உடைச்சாச்சு. முன்னர் புலியை உடைத்தார். இப்போது கூட்டமைப்பை உடைத்தார் அவ்வளவே என மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் மனித உரிமை நிலைவரங்களில் ஜனாதிபதி மாற்றம் முன்னேற்றத்தை தரவில்லை!

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு



ஜனாதிபதி மாற்றம் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தனது வருடாந்த அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

பலவருடங்களாக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை, தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை, ஊழல் ஆகிய சட்டத்தின் ஆட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியதால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மில்லியன் கணக்கானவர்களிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதை தொடர்ந்து 2022 இல் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளிற்கு இறங்கினார்கள். நீண்டகாலமாக மனித உரிமை குற்றச் சாட்டுகளிற்கு உள்ளான ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ ஜூலையில் பதவி விலகினார்,எனினும் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தார், செயற்பாட்டாளர்களை கைது செய்தார், கடந்தகால குற்றங்களிற்கு நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை புறக்கணித்தார் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறல்களுக்கான வேண்டுகோள்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒடுக்குமுறையால் பதிலளித்துள்ளார் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை இந்த நெருக்கடிக்குத் தீர்வை காண்பதற்கு உதவும் அதன் சர்வதேச சகாக்கள் அடிப்படை மனித உரிமைகள் சீர்திருத்தம் மற்றும் சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை வலியுறுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஜப்பான் அவதானம்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளனர். ஜப்பானிய அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் சடோஷி புஜிமரு உள்ளிட்ட ஜப்பானிய வர்த்தகர்கள் குழு புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டதோடு விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா, சுரங்கக் கைத்தொழில், தொழிலாளர் பயிற்சி உட்பட இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் பற்றியும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களின் கீழ், புதிய மற்றும் வளர்ந்து வரும் கைத்தொழில்களுக்கு ஏற்றவாறு நாட்டை மாற்றியமைக்கும் வகையில் இலங்கையின் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதிபணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# வசந்த முதலிகேயின் விடுதலைக்காக கையெழுத்துப் பெறும் நடவடிக்கை!

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசத்தில் இடம்பெற்றது



கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகேயின் விடுதலைக்காக 1,000 சத்தியக் கடதாசிகளில் கையெழுத்து பெறுகின்ற நடவடிக்கையை பூர்த்தி செய்யும் நடவடிக்கையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் கட்டுநாயக்க, எவரிவத்தை மணிக்கூண்டு கோபுரம் அருகில் நடைபெற்றது.

வெகுஜன அமைப்புகள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது, சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் சத்திய பிரமாண கடதாசிகளில் கையெழுத்திட்டனர்.

கையெழுத்து பெறும் நடவடிக்கையோடு வசந்த முதலிகேயை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியதோடு சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆசிரியர் தொழிற்சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் சிவில் அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டனர்.

# கைதுசெய்யப்பட்ட தொழில்பயிற்சி அதிகாரசபை உதவி முகாமையாளர் மீது துப்பாக்கிச் சூடு!

பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பிரிவினால் கைதுசெய்யப்பட்ட இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையின் உதவி முகாமையாளர் ஒருவர் பொலிஸாரிடமிருந்து தப்ப முயன்றவேளை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் நாரஹன்பிட்டியில் 15 கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானையில் பொலிஸாரிடமிருந்து தப்பிச்செல்ல முயன்றவேளை அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக அழைத்து சென்றவேளை இந்த சம்பவம் இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். பொலிஸார் ஒரு வரும் காயமடைந்துள்ளார் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஹிக்கடுவவை சேர்ந்த 41 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2023இல் வெளியிடப்பெற்றது.